# மரக்கன்றுகள் நடும் விழா




சிதம்பரம் அடுத்த அரசு கலை கல்லூரியில், மரக்கன்றுகள் நடும் பணியை, வட்டார போக்குவரத்து அலுவலர் முக்கண்ணன் துவக்கி வைத்தார். அருகில், கல்லூரி முதல்வர் சாந்தி.

**கிள்ளை, பிப். 6–**

சிதம்பரம் அடுத்த சி.முட்லுார் அரசு கலைக் கல்லுாரி வளாகத்தில், மரக்கன்றுகள் நடும் விழா நடந்தது.

கல்லுாரி முதல்வர் சாந்தி தலைமை தாங்கினார்.

துறை தலைவர்கள் மீனா, சேகர், லோகராஜன் முன்னிலை வகித்தனர். பேராசிரியர் ராஜலட்சுமி வரவேற்றார். மரக்கன்றுகளை, சிதம்பரம் வட்டார போக்குவரத்து அலுவலர் முக்கண்ணன் நட்டார்.

துறை தலைவர்கள் அறிவழகன், காந்தியப்பன், தினகரன், வடிவாம்பிகை, வட்டார போக்குவரத்து இன்ஸ்பெக்டர் செல்வம் மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்றனர்.